**கவனிக்க** .- *11.07.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1872 - 2014 ජූලි මස 18 වැනි සිකුරාදා - 2014.07.18

*1872 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 896 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 908 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஓகத்து மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## அக்குறணை பிரதேச சபை

*மத்திய மாகாண அரசாங்க சேவை வெற்றிடங்கள்*

*அக்குறணை பிரதேச சபையில் கீழ்காணும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அக்குறணை பிரதேச சபையின் அதிகாரப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. அக்குறணை பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பின்வரும் பொதுத் தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்களாயிருத்தல் வேண்டும்.*

*1.1.* **பொதுத் தகைமைகள்** :

*(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதியில் அக்குறணை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும் ;*

*(ஆ) பதவிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளூராட்சி நிறுவனமொன்றில் சேவையாற்றுவோர் தொடர்பில் உயரிய வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது;*

*(இ) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாகவும் சிறந்த உடல் நலமும் உளநலமும் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதோடு, நியமனம் பெற்று ஒரு மாதத்தினுள் உரிய தகைமைகளைப் பெற்றுள்ள வைத்தியர் ஒருவரினால் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். அந்த மருத்துவப் பரிசோதனையின் போது உரிய உடற் தகுதியைப் பெறாதவிடத்து நியமனம் இரத்துச் செய்யப்படும்;*

*(ஈ) குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றில் தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்;*

*(உ) அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து சேவையிறக்கம் செய்யப்படாதவராக இருத்தல் வேண்டும்.*

*1.2.* **வெற்றிடமாக உள்ள பதவிகள்** :

*2.1 கன ரக இயந்திர இயக்குநர் - III ஆம் வகுப்பு - வெற்றிம் - 01
(தேர்ச்சிபெற்ற)*

***சம்பள அளவுத்திட்டம்***.- PL -3-2006 A - *ரூபா 12,470-10×130- 10×145-10×160-12×170 –ரூபா 18,860 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்டது.*

(i) ***கல்வித் தகைமைகள்***.- *இரு அமர்வுகளுக்குக் மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி அடங்கலாக குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கல்விப் பொது தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.) குறைந்தபட்ச உயரம் 5 அடி 2 1/2 அங்குலம் இருத்தல் வேண்டும். பகல் நேரங்களிலும் இரவு வேளைகளிலும் கடமையாற்றக்கூடிய விதத்தில் உடல் ரீதியாக பொருத்தமான நிலைமையில் இருக்கவேண்டியதோடு, சிறந்த கண்பார்வை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.*

(ii) ***தொழில் தகைமைகள்***.-*வீதிச் சட்ட ஒழுங்குகள் தொடர்பான சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும். கனரக வாகனங்கள் செலுத்துவதற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்படும் திறன் தொடர்பான சான்றிதழை (வாகன வகுப்பு-* A *) பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்புச் செய்யும் தினத்திற்கு 3 வருடங்களுக்கு முன்னர் உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். கனரக இயந்திரங்களை இயக்குதல், மோட்டார் வாகன தொழில்நுட்பம் பற்றி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தான ஒரு வருடப் பயிற்சி.*

(iii) ***அனுபவம்***.- *கனரக இயந்திரங்களை இயக்குவதில் குறைந்தது 2 வருட அனுபவம்.*

02.2 மருந்து (ஔடத) கலவையாளர் - III ஆம் வகுப்பு - வெற்றிம் - 01
(பகுதி தேர்ச்சிசார்)

**சம்பள அளவுத்திட்டம்**.- PL -2-2006 A - ரூபா 12,210-10×130- 10×145-10×160-10×170 –ரூபா 18,600 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்டது.

(i) **கல்வித் தகைமைகள்**.- இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி அடங்கலாக குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கல்விப் பொது தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ii) **தொழில் தகைமை/ தேர்ச்சி**.-உரிய தொழில் தொடர்பாக ஒரு வருடத்துக்குக் குறையாத காலத்தைக்கொண்ட பயிற்சிநெறியொன்றைத் தொடர்ந்தவராக இருத்தல் அல்லது உரிய தொழில் தொடர்பில் தேசிய தொழில் சார் பயிற்சித் தகைமை 2 ஆவது மட்டம் (NVQ2) அல்லது 3ஆவது மட்டம் (NVQ3) அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல்.

(iii) **அனுபவம்**.- உரிய தொழில் தொடர்பில் குறைந்தது 2 வருட அனுபவம்.

02.3 நூலக உதவியாளர் - III ஆம் வகுப்பு - வெற்றிம் - 2
(பகுதி தேர்ச்சிசார்)

**சம்பள அளவுத்திட்டம்**.- PL -1-2006 A - ரூபா 11,730-10×120-10×130- 10×145-10×160-12×170 – ரூபா 17,600 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்தைக் கொண்டது.

(i) **கல்வித் தகைமைகள்**.- இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ்மொழி அடங்கலாக குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் கல்விப் பொது தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சையில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**3. சேவையில் நியமிப்பதற்கான நிபந்தனைகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும் ;
(ii) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்;
(iii) இப்பதவி மூன்று (3) வருடங்கள் தகுதிகாண் காலத்தை கொண்டது. அக்காலத்தினுள் திருப்திகரமான முறையில் தமது சேவையை முன்னெடுக்காதவிடத்து நியமனம் உறுதிப்படுத்தப்படாமல் சேவை முடிவுறுத்தப்படும்;
(iv) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு அமைவான துறைகளில் பெற்றுள்ள அனுபவம் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்படும்.

**4. ஆட்சேர்ப்புக்குத் தெரிவு செய்யும் முறை.-**

(i) கனரக இயந்திர இயக்குநர் பதவிக்கான விண்ணப்பதாரிகள் தவிர ஏனைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரீட்சிக்கப்பட்ட பின்னர் நியமனங்கள் மேற்கொள்ளப்படும் ;

(ii) கனரக இயந்திர இயக்குநர் பதவிக்கான தொழில் தகைமைப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களின் தகைமை ஒழுங்குக்கு ஏற்ப நியமனங்கள் மேற்கொள்ளப்படும் ;

(iii) சபையில் தற்போது சேவையாற்றும் ஊழியர்கள் தொடர்பில் நியமனத்தின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

**5. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை.-**

(i) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் ஒழுங்கில் தாம் தயாரித்துக் கொள்ளும் விண்ணப்பப்படிவங்களை 2014.07.21 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய விதத்தில் "செயலாளர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைப் பெற்றிராத விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்து போகும் விண்ணப்பங்களுக்கு பிரதேச சபை பொறுப்புக்கூறமாட்டாது.

6. **சான்றிதழ்களின் பிரதிகள்** :- விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) இணைக்கப்படல் வேண்டும். (போட்டோ பிரதிகள் மிகவும் சிறந்தது) :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) தமது வதிவிடத்தை உறுதி செய்வதற்காக கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் உறுதி ஒப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;
(iv) அண்மையில் பெறப்பட்ட இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள். (அவற்றில் ஒன்று தாம் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலரிடமிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும் ;
(v) அனுபவத்தை உறுதிசெய்யும் கடிதம் ;
(vi) கனரக இயந்திர இயக்குநர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களாயின் சாரதி அனுமதிப்பத்திரம்.

7. விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அக்காலப்பிரிவில் இந்த ஆட்சேர்ப்பை பிற்படுத்த அல்லது மாற்றங்கள் செய்வதற்கு அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்யக்கூடிய அதிகாரம் அக்குறணை பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

8. யாராவது ஒரு விண்ணப்பதாரி ஒருவர் தான் தெரிவு செய்யப்படும் வகையில் ஏதேனுமொரு விதத்தில் செல்வாக்கை பிரயோகித்தல் அல்லது அவ்வகையில் அழுத்தம் கொடுக்க முயற்சித்தல் அவ்விண்ணப்பதாரியைத் தகுதியற்றவராக ஆக்கக் காரணமாகும்.

டீ. எஸ். ராஜபக்ஷ,
செயலாளர்,
அக்குறணை பிரதேச சபை.

அக்குறணை பிரதேச சபை,
அலவத்துகொட,
2014, யூன் 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண சபையின் அரச சேவையின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்தல்**

அக்குறணை பிரதேச சபை ...................... பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
2. நிரந்தர வதிவிட முகவரி :-----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
5. பிறந்த திகதி :-----.
வருடம் :----- மாதம் :----- திகதி :-----.
6. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளம் இறுதித் திகதியன்று வயது :-
வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் : -----.
7. பால் (ஆண்/பெண்) :-----.
8. திருமணமானவரா?:-----.
9. இலங்கைப் பிரசையாக இருப்பது பிறப்பினாலா? அல்லது பதிவினாலா? :----.
10. பெற்றுள்ள அதி உயர் கல்வித்தகைமை :----.
11. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)
க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் :----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

12. (i) வேறு தகைமைகள் :-----.
(ii) தொழில்சார் தகைமைகள் :-----.
(iii) சேவை அனுபவம் :-----.

13. தாங்கள் தற்போது இப்பிரதேச சபையில் சேவையாற்றுவதாயின் தற்போது வகிக்கும் பதவி :-
நிரந்தர/சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த /பதில் ஊழியரா எனும் விபரம். அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:-

14. நீங்கள் எப்பொழுதாவது குற்றச்சாட்டொன்றுக்காக நீதிமன்றமொன்றால் குற்றவாளியாக ஆக்கப்பட்டுள்ளீரா? :----.

15. சாரதி பதவிக்கான விண்ணப்பதாரிகள் மாத்திரம் இப்பகுதியை நிரப்ப வேண்டும்.
(i) சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :-----.
(ii) அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :-----.
(iii) அனுமதிப்பத்திர வகை :-----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள மேற்படி தகவல்கள் யாவும் நான் அறிந்த வகையில் சரியானவை எனத் தெரிவிக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னராயின் அதற்கான தகுதியை இழப்பேன் எனவும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**தற்போது அரச சேவையிலிருந்து விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் விதப்புரை**

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................ என்பவர் இந்நிறுவனத்தில் ............................... ஆகப் பணியாற்றுகின்றார். இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. இவர் எத்தகைய தண்டனைக்கும் உள்ளாகவில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு இவரது விண்ணப்பப் படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

-----,
நிறுவனத்தலைவரின் கையொப்பம்.

பெயர்:-----.
பதவி :-----.
நிறுவனம் :-----.
திகதி : -----.

7-398

---

**கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவை வெற்றிடங்களை நிரப்புதல்

கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையில் தற்போதைக்கு வெற்றிடமாகவுள்ள கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக உரிய தகைமைகள் உள்ள தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | கள ஊழியர் | 1 | PL 1-2006 A<br>ரூ. 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்திபெற்றிருத்தல் |

**2. சேர்த்துக்கொள்வதற்கான பொது நிபந்தனைகள் .-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி விண்ணப்பிக்கின்ற போது தென்மாகாண எல்லைக்குள் குறைந்தது மூன்று வருடங்களாவது நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பிக்கும் திகதிக்கு 18 வயதுக்கு மேற்படாதவராகவும் 45 வயதிற்குக் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும். (அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஊழியருக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது) ;
(iv) விண்ணப்பதாரி சிறந்த குணநலன்களையும் சிறந்த உடலாரோக்கியமும் உடையவராயிருத்தல் ;
(v) கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையில் உரிய பதவியில் பதில்/சமயோசித/கொந்தராத்து பதவிகளில் சேவையிலீடுபட்டிருப்பவர் தொடர்பாக முன் உரிமை செலுத்தப்படும் ;
(vi) குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெற்றவராயிருத்தல் கூடாது;
(vii) விண்ணப்பித்த பின் அல்லது விண்ணப்பிக்கின்ற கால எல்லைக்குள் அல்லது இவ் ஆட்சேர்ப்பினை பிற்போடுதல் அல்லது வேறாக்குதல், இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது மாற்றங்கள் செய்தல் என்பன தொடர்பான அதிகாரம் கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் தவிசாளருக்குரியதாகும்.

**3. சேவையிலமர்த்துதல் தொடர்பான நிபந்தனைகள் :-**

(i) இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத்திற்குரியது ;
(ii) நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது ;
(iii) இவ்வாட் சேர்ப்பின் நிபந்தனைகள், சட்டதிட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கை தாபன விதிக் கோவையின் விதிகளுக்கமையவும், நிதிப் பிரமாணங்களுக்கு ஏற்பவும், திணைக்களத்தின் நியமங்களுக்கு ஏற்பவும், தென் மாகாண சபையின் அல்லது தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் அல்லது கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் மூலம் அவ்வப்போது வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு உடன்படல் வேண்டும்.

**விண்ணப்பத்தோடு பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :-**

(i) பிறப்பு சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ்;
(iv) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்
(v) அண்மையில் பெறப்பட்ட நற்சாட்சிப்பத்திரங்கள் 2 ;
(vi) வேறு தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
(vii) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறைகள் :**

(i) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட (A4 அளவிலான) விண்ணப்பம் ஒன்று 2014.07.31 ஆந் திகதிக்கு முன் "தவிசாளர், கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை, கிரிந்த" எனும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் ;
(ii) விண்ணப்பப் படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் உரிய பதவியைக் குறிப்பிடல் வேண்டும் ;
(iii) ஏற்கனவே அரச, மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்கள் தமது தாபனத் தலைவரின் சிபாரிசுடனே அனுப்பப்படல் வேண்டும் ;
(iv) நேரில் கையளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்தோடு காலதாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சனத் ஹெட்டியாராச்சி,
தவிசாளர்,
கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிந்த புஹுல்வெல்ல,
2014, யூன் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை**

தென்மாகாண அரச சேவையின் ....................................................................... பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளல்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
2. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. அ. நீர் இலங்கைப் பிரசையா ? :----.
   ஆ. அவ்வாறாயின் பரம்பரையாகவா? அல்லது பதிவின் மூலமா? :----.
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
6. பால் (ஆண்/பெண்) :----.
7. சிவில் அந்தஸ்து :----.
8. தொலைபேசி இலக்கம் :----.
9. பிறந்த திகதி :----.
   ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
10. 2014.07.31 ஆந் திகதிக்கு வயது :-
    வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
11. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகள் விபரம்) :----.
12. தொழில் தகைமைகள் :----.
13. சேவை அனுபவம் :----.
14. நீர் எப்போதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா? :----.
15. தற்போது பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளீராயின் அது தொடர்பான விபரம் :----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப சரியானவை என உறுதி கூறுகிறேன். இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு ஏற்ப என்னால் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டால் நான் நியமனம் பெறுவதற்கு முன்னராயின் தகுதியற்றவனாக ஆவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கு அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி ............................................... தற்போது இந்த திணைக்களத்தின்/நிறுவனத்தின் ..................................... ஆக சேவையாற்றுகிறார். இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. இவர் எவ்விதமான ஒழுக்காற்று தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) ஆளாக்கப்படவில்லை என்பதனையும் இதன் மூலம் உறுதிப்படுத்துவதோடு, விண்ணப்பப் படிவத்தை சிபாரிசு செய்து முன்வைக்கிறேன்/மறுக்கிறேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்தரையை இடுக)
திகதி :----.

7-399

## குளியாபிட்டிய பிரதேச சபை

### ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத III ஆம் தர பதவிக்காக ஆட்சேர்ப்பு

குளியாபிட்டிய பிரதேச சபையின் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படுகின்ற பதவிகளுக்கு தகுதி உள்ளவர்களை தேர்ந்தெடுப்பதற்காக உரிய தகுதியுள்ள குளியாபிடிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வசிப்பவர்களிடத்திலிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | பதவி களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை | தேவையான தொழில்நுட்ப ஆற்றலும் திறமையும் | அனுபவம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குழாய் கிணறு பொம்பை நடாத்துநர் | 1 | ரூ. 11,730 - 10 × 120 - 10 × 130 -10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 PL 1- 2006 A | கல்விப்பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் அல்லாத) | பதவிக்குரிய தொழில் பயிற்சி அதிகாரி மூலம் அளிக்கப் பட்டுள்ள தொழில் பயிற்சி பற்றி N. V. Q. 02 அல்லது 03 தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல் | உரிய துறையில் பயிற்சி காலம் தவிர்ந்து 2 வருட கால செயல்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப் படுத்தல் வேண்டும்.) |
| 2 | துறைசார் தொழிலாளி | 5 | ரூ. 11,730 - 10 × 120 - 10 × 130 -10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 PL 1- 2006 A | கல்விப்பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் அல்லாத) | - | - |
| 3 | காவலர் | 2 | ரூ. 11,730 - 10 × 120 - 10 × 130 -10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 PL 1- 2006 A | கல்விப்பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் அல்லாத) | - | - |
| 4 | வாசிகசாலை உதவியாளர் | 2 | ரூ. 11,730 - 10 × 120 - 10 × 130 -10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 PL 1- 2006 A | கல்விப்பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் அல்லாத) | - | - |
| 5 | சுகாதாரத் தொழிலாளி | 1 | ரூ. 11,730 - 10 × 120 - 10 × 130 -10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 PL 1- 2006 A | அரசினால் அனுமதிக்கப் பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். | - | - |

1. **தேவையான மற்றைய தகைமைகள்.-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசி தினத்திற்கு விண்ணப்பதாரி 3 வருட காலத்திற்கு குறையாது குளியாபிடிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் அட்டையினால் அல்லது பிரதேச செயலாளர் அவர்களினால் வழங்கப்படும் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தலாம்.);

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்கு மேல் வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.) ;

(iv) தண்டனைச் சட்ட கோவையின்கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டு தண்டனைக்கு உள்ளாகாதவராக இருத்தல் வேண்டும்;

(v) நல்லொழுக்கமுடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. **ஆட்சேர்ப்பு முறை.**- நேர்முகப் பரீட்சைக்காக கலந்துக் கொள்ளும் விண்ணப்பதாரிகளின் கல்வி தகைமை மற்றும் வாய்மொழி மூலப் பரீட்சையின் பெறுபேறுபடி ஆட்சேர்ப்பு நடைபெறும்.

3. **சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்.**-

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது;
(ii) விதவைகள், அநாதைகள், தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும்;
(iii) நியமனம் 3 வருட கால தகுதிகாண் காலத்துக்குட்பட்டதாகும்;
(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக-

கௌரவ ஆளுநர் அவர்களினால் 2008.11.19 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ள சேவைக் கோட்பாட்டின் நிபந்தனைகளுக்கும் நிதிச் சட்டத்திற்கும் அரச திணைக்கள கட்டளைகளுக்கும் வடமேல் மாகாண சபையினால் அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு அல்லது குளியாபிடிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைய நடவடிக்கை எடுப்பதற்கு விண்ணப்பதாரி உடன்படுதல் வேண்டும்.

4. **விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்தல்.**-

(i) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரித்து தமது விண்ணப்பங்களை 2014.08.18 ஆந் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன் "செயலாளர், குளியாபிடிய பிரதேச சபை, குளியாபிடிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் ;
(ii) விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் ................ பதவிக்கான விண்ணப்பம் என்று குறிப்பிட்டு விண்ணப்பப் படிவம் அனுப்புதல் வேண்டும் ;
(iii) விண்ணப்பப் படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதி இணைத்து அனுப்ப வேண்டும் :-

* பிறப்புச் சான்றிதழ் ;
* கல்விச் சான்றிதழ்கள் ;
* பாடசாலையை விட்டு விலகியதற்கான சான்றிதழ் ;
* வதிவினை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரின் சான்றிதழ் (பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்) ;
* அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ் ;
* தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

இந்த விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் போது அல்லது இந்த ஆட்சேர்ப்பை காலதாமதப்படுத்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது திருத்தல் என்பவற்றிற்கான பூரண அதிகாரம் எனக்குரியதாகும்.

ஜே. ஏ. சுஜீவனீ ஜயசிங்ஹ,
செயலாளர்,
குளியாபிடிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குளியாபிடிய,
2014, யூன் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குளியாபிடிய பிரதேச சபையில் ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத III ஆம் தர பதவிக்காக ஆட்சேர்ப்பு - 2014**

...................... பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
3. நிரந்தர முகவரி :----.

4. கிராம அலுவலர் பிரிவு :----.
5. பிரதேச செயலாளர் பிரிவு :----.
6. மாவட்டம் :----.
7. பிறந்த திகதி : ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
8. விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
9. பால் : (ஆண்/பெண்) :----.
10. நீங்கள் இலங்கை பிரசையா? அப்படியாயின் பரம்பரையாகவா அல்லது பதிவு முறையிலா? :----.
11. திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி :----.
12. தேசிய ஆளடையாளட்டையின் இலக்கம் :----.
13. கல்வித் தகைமை :----.
(i) க. பொ. த. (சா. த. ) பரீட்சை :----.
சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம் :-

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

14. தொழில் தகைமையும் வேறு தகைமைகளும்:-

15. சேவை பற்றிய அனுபவம் :-

(i) தற்போது சேவை செய்கின்ற நிறுவனம் ;
(ii) தற்போது வகிக்கும் பதவி ;
(iii) அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி ;
(iv) இதற்கு முன் சேவை செய்த நிலையமும் வகித்த பதவியும்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**16. தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிக்கு நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பதாரி ஆகிய திரு./திருமதி/செல்வி ....................................... தற்போது இந்த நிறுவனத்தில் ................................ ஆக சேவை செய்கின்றார். இவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது. இவர் எந்த விதத்திலும் ஒழுக்காற்று தண்டனைக்கும் உள்ளாகவில்லை என்று சான்று பகர்வதுடன் விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவர் அல்லது அதிகாரம்
அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :-----.
திகதி :----.

7- 429

**உடுபத்தாவ பிரதேச சபை**

**வடமேல் மாகாண சபை**

வடமேல் மாகாண சபை அரச சேவையில் வெற்றிடத்திற்காக ஆட்சேர்ப்பு

உடுபத்தாவ பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படுகின்ற ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற, பகுதி தேர்ச்சி பெற்ற ஆரம்ப மட்டமும் தேர்ச்சி அற்ற பதவிக்காக வடமேல் கௌரவ ஆளுநரினால் 2008.11.19 மற்றும் 2009.05.12 ஆந் திகதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப தகைமைகளை உடைய உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் வசிக்கின்றவர்களிடத்திலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

ஆரம்ப மட்ட தேர்ச்சி பெற்ற ''பாரமான வாகன நடத்துநர்'' பதவிக்காக மாத்திரம் குருநாகல் மாவட்டத்திலிருந்து விண்ணப்பம் கோரப்படுவதுடன், உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தகுதியுடையோர் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் மாவட்டத்தில் மற்றைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து அதிக தகைமையுடையவர்/தகைமையுடையவள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

| பதவி | சேவை பிரிவு | ஆட்சேர்ப்பு தரம் | வெற்றிட எண்ணிக்கை | சம்பள திட்டம் |
|---|---|---|---|---|
| சுகாதார தொழிலாளி | ஆரம்ப மட்ட தொழில்நுட்பமற்ற | III | 1 | (அ. நி. சு. 06/2006 IV) (PL1-2006A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600. |
| அலுவலக அலுவல் உதவியாளர் | ஆரம்ப மட்ட தொழில்நுட்பமற்ற | III | 1 | (அ. நி. சு. 06/2006 IV) (PL1-2006A ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600. |
| மின் தொழில் நுட்பவியலாளர் | ஆரம்ப மட்ட பகுதி தொழில்நுட்பம் | III | 1 | (அ. நி. சு. 06/2006 IV) (PL3-2006A ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860. |
| பாரமான வாகன இயக்குநர் | ஆரம்ப மட்ட தொழில்நுட்பம் | III | 1 | (அ. நி. சு. 06/2006 IV) (PL3-2006A ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860. |
| சாரதி | ஆரம்ப மட்ட தொழில்நுட்பம் | III | 3 | (அ. நி. சு. 06/2006 IV) (PL3-2006A ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860. |

**1. சுகாதார தொழிலாளர், அலுவலக அலுவல் உதவியாளர் பதவிக்காக தேவையான தகைமை :**

(i) **கல்வி தகைமை.-** கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர)

சுகாதார தொழிலாளர் பதவிக்காக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

(ii) **வயது.-** விண்ணப்பிக்கும் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உரிய ஆட்சேர்ப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் ஆரம்ப மட்ட தேர்ச்சி அற்ற பதவியில் (அமய/தற்காலிக/ஒப்பந்த/உடன்படிக்கை படி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.)

**2. மின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக தேவையான தகைமை :**

(i) **கல்வி தகைமை.-வெளி விண்ணப்பதாரிகளுக்காக.-** கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் குறைந்தபட்சம் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர)
**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்காக.-**
மாகாண அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர பதவியில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்காக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

(ii) **வயது.-** மேற்கூறப்பட்ட ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற பதவிக்காக தேவையான வயதெல்லையே ஆகும்.

(iii) ***தேர்ச்சிமட்டம்.***- *அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியில் அல்லது தேசிய பயிற்சி நிறுவனத்தில் அல்லது மின் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி சான்றிதழ் (N. V. Q. II அல்லது III தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல்)*

(iv) ***அனுபவம்.***- *உரிய துறையில் அரச நிறுவனத்தில்/அரச கூட்டுத்தாபனங்களில் மற்றும் சட்டரீதியான நிறுவனத்தில் அல்லது வேறு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)*

***3. சாரதி மற்றும் பாரமான வாகன இயக்குநர் பதவிக்காக தேவையான தகைமை :***

(i) ***கல்வி தகைமை.-வெளி விண்ணப்பதாரிகளுக்காக.***- *கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமை சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பத்திற்குரிய பாடம் தவிர) குறைந்தபட்சம் ஒரே அமர்வில் 5 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

***உள்வாரி விண்ணப்பதாரிகளுக்காக.***-

(i) *இதற்காக உரிய ஆட்சேர்ப்பு திட்டம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட திகதியாகிய 2009.05.12 ஆந் திகதிக்கு முன் உடுபத்தாவ பிரதேச சபையில் ஆரம்ப தேர்ச்சி மட்ட பதவிக்காக அமய/தற்காலிக/ஒப்பந்த/உடன்படிக்கை படி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் அச்சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமை உரியதாகும்.*

(ii) ***வயது.***- *மேற்கூறப்பட்ட மற்றும் 2 பதவிகளுக்கு உரிய வயதெல்லையே ஆகும்.*

(iii) ***தேர்ச்சிமட்டம்.***-

* *மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட பாரமான வாகனம் மற்றும் பாரமற்ற சிறு வாகன சாரதி அத்தாட்சிப்பத்திரம்.*

* *பாரமான வாகன இயந்திர இயக்குநருக்காக I. T. A. T. சான்றிதழ் அவசியமாகும்.*

(iv) ***அனுபவம்.***- *சாரதி பதவிக்காக பாரமான வாகன சாரதியாக 03 வருட கால அனுபவமும் பாரமான வாகன நடாத்துனர் பதவிக்காக பாரமான வாகன சாரதியாக 5 வருட கால அனுபவமும் இருத்தல் வேண்டும்.*

*உரிய துறையில் அரச நிறுவனத்தில்/அரச கூட்டுத்தாபனங்களில் மற்றும் சட்டரீதியான நிறுவனத்தில் அல்லது வேறு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)*

***மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு முறை.***- *பரவலாக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கும் மற்றும் உரிய வகையில் தொழில் திறமையினை உறுதிப்படுத்தும் பரிசீலனையின் படி ஆட்சேர்ப்பு நடைபெறும். தற்போது அமய/தற்காலிக/ஒப்பந்த/உடன்படிக்கை படி சபையில் சேவை செய்கின்ற சேவையாளர்களுக்காக மேலதிக சலுகை வழங்கப்படும்.*

*ஆரம்ப தகைமை உடையவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.*

***மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக சேவையில் ஈடுபடுத்துவதற்கான உடன்படிக்கை.***- *இந்த பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். தேர்ந்தெடுக்கப்படுவது 3 வருட கால நன்னடத்தைக்குட்பட்டதாகும். அந்த காலத்தினுள் உரிய கடமை, வேலை, வரவு மற்றும் நன்னடத்தை மகிழ்ச்சிகரமான வகையில் கொண்டு நடாத்தி செல்லப்பட்டிருப்பின் மற்றும் முதலாவது தடைதாண்டி பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் நன்னடத்தை கால கடைசியில் சேவையில்/பதவியில் நிரந்தரம் செய்யப்படும். சுற்று நிருபச் சட்டத்திட்டப்படி விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உட்படுதல் வேண்டும்.*

***மேற்கூறப்பட்ட பதவிகளுக்காக பொது உடன்படிக்கை :***

*(1) எல்லா ஆட்சேர்ப்பிற்காகவும் தாபனக் கோவையில் 11 அத்தியாயத்தில் 10 தொடக்கம் 12 வரை பிரிவு உரித்தாகும்.*
*(2) விண்ணப்பதாரி பரம்பரையாகவோ பதிவினாலோ இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்.*
*(3) நல்லொழுக்கமும் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.*
*(4) விண்ணப்பதாரிகள் தண்டனைச் சட்டக்கோவை சட்டப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.*
*(5) உடுபத்தாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (வதிவினை கிராம அலுவலரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்)*
*(6) விண்ணப்பப் படிவம் கோரிய பின் அல்லது கோரும் சந்தர்ப்பத்தினுள் அல்லது இந்த ஆட்சேர்ப்பு காலதாமதம் ஏற்படல் அல்லது இந்த அறிவித்தல் இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்தும் அதிகாரம் உடுபத்தாவ பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.*

***விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முறை***: எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் உள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரப்படி விண்ணப்பத்தை தயாரித்து .................... ஆந் திகதி முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், பிரதேச சபை, உடுபத்தாவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைத்து அனுப்பப்பட வேண்டும் :

- * பிறப்புச்சான்றிதழ்
- * கல்விச்சான்றிதழ்
- * தொழில்நுட்ப அறிவு/திறமை மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ் (சாரதி அனுமதிப் பத்திரம் - தொழில்நுட்ப மற்றும் பகுதி தேர்ச்சி பெற்ற பதவிக்காக)
- * தேசிய ஆளடையாளட்டையின் பிரதி
- * கிராம அலுவலரின் சான்றிதழ்
- * சாரதியாக 03/05 வருடத்திற்கு அதிக அனுபவம் சம்பந்தமாக சேவைச் சான்றிதழ் /மின் தொழில் நுட்பவியலாளராக 2 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பற்றிய சேவை சான்றிதழ்.

ஜே. ஏ. சோமசிரி ஜயசிங்ஹ,
செயலாளர்,
உடுபத்தாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
உடுபத்தாவ,
2014, யுன் 20.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**உடுபத்தாவ பிரதேச சபை**

ஆரம்ப மட்ட தொழில்நுட்பமற்ற, பகுதி தொழில்நுட்பம் பெற்ற தொழில்நுட்பமற்ற பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :----.
   முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. தபால் முகவரி :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. பிறந்த திகதி :- ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.
5. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
6. தேசிய ஆளடையாளட்டையின் இலக்கம் :----.
7. திருமணமானவர்/திருமணமாகாதவர் பற்றி :----.
8. தேசிய இனம் :----.
9. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா அல்லது பதிவு மூலமா?
10. கல்வித்தகைமை :----.
11. தொழில்நுட்ப தேர்ச்சி :----.
12. சேவை அனுபவம் :----.
13. தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின்-
    (i) தற்போது வகிக்கும் பதவி :----.
    (ii) அந்தப் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதி :----.
    (iii) அந்த பதவியின் தன்மை (அமைய/தற்காலிக/ஒப்பந்த ) அடிப்படையில் அது பற்றிய விபரம்)
    (நியமனக் கடிதத்தின் நிழற் பிரதியினை இணைக்கவும்)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவராவேனென்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கவதற்கு ஆளாவேன் என்றும் எனக்குத் தெரியும்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சிபாரிசு (தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)**

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி .................................................. தற்போது இந்த பிரதேச சபையில் ........................... திகதி தொடக்கம் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில்) சேவையில் உள்ளார் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
நிறுவன தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திணைக்களம் :----.
திகதி :----.

7-525

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ரம்புக்கனைப் பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2014.05.27 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப வேண்டும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கின்றேன்.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2014, மே 30.

| | | | |
|---|---|---|---|
| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
| | | 300 மீற்றர் (984 அடி) | 3.6 மீற்றர் (12 அடி) |

வீதியின் பெயர் - பமுனுகம வத்த ஊடாக மொட்டப்புலிய வீதி
கிராம அலுவலர் பிரிவு - மொட்டப்புலிய

சேனாநாயக்க ஒழுங்கையில் ஆரம்பித்து இடப்பக்கமாக பீ. ஏ. டி. ஏ. எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ என்பவருக்கு உரித்தான பமுணுகமவத்த எனும் காணியிலும்,

வலப்பக்கமாக ஓடை வழிக்கு எல்லையாவதுமான பமுணுகம வத்த ஊடாக மொட்டப்புலிய வீதி.

| | | | |
|---|---|---|---|
| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
| | | 1200 மீற்றர் (3936 அடி) | 2.4 மீற்றர் (8 அடி) |

வீதியின் பெயர் - உடகம பிரதான வீதியிலிருந்து பஹலகம அரம்பேபொல வரையிலான வீதி
கிராம அலுவலர் பிரிவு - உடுகம கோந்தேவல

உடுகம பிரதான வீதியிலிருந்து ஆரம்பிக்கின்ற இடப்பக்கமாக யூ. எம். சுரங்க மதுஷங்க செனவிரத்தின என்பவருக்கு உரித்தான கும்புக்கஹமுலவத்த (தெனிய கும்புர), ஜீ. எம். அவங்கிரா என்பவருக்கு உரித்தான பூகெந்தகொல்ல வத்த, ஜீ. எம். குணதாஸ என்பவருக்கு உரித்தான பூகெந்தகொல்ல வத்த, எச். எம். சுனில் ஹேரத் என்பவருக்குச் சொந்தமான தோரதென்ன வத்த எனும் பூகெந்தகொல்ல வத்த, எஸ். எம். கே. உடுகம என்பவருக்கு உரித்தான வெலிகந்தகும்புர, கே. எம். நிமல் விஜேநாயக என்பவருக்கு உரித்தான தெபோவ கும்புர, எச். ஆர். சுனில் ஹேமன்த குமார என்பவருக்கு உரித்தான வெலிகந்த கும்புர காணிகளாலும்,

வலப்பக்கமாக யூ. எம். சுரங்க மதுஷங்க என்பவருக்குச் சொந்தமான குபுக்கஹமுலஹேன வத்த, ஈ. எம். பிரேமாவதீ என்பவருக்கு உரித்தான கும்புகஹமுலவத்த, (முத்தெட்டுவேஹேன), என். எஸ். பண்டார என்வருக்கு உரித்தான வல் அரம்பேவத்த, ஆர். ஆர். கித்சிறி பண்டார என்பவருக்கு உரித்தான பில்லேவ வத்த, ஐ. ஜீ. ஜயமன் என்பவருக்கு உரித்தான தெபோவ கும்புர, ஜே. ஏ. ஜயகொடி மெணிகே என்பவருக்கு உரித்தான அரம்பேபொல கும்புர, எச். எம். சீதாவதீ மெணிகே என்பவருக்கு உரித்தான அட்டலாஹ கும்புர, எஸ். ஆர். அபேநாயக மெணிகே என்பவருக்கு உரித்தான வரகாபல கும்புர எனும் காணிகளுக்கு எல்லையாவதுமான உடுகம பிரதான வீதியிலிருந்து பஹலகம அரம்பேபொல யாய வரையிலான வீதி.

| | | | |
|---|---|---|---|
| *வீதியின் விபரம்* | - | *நீளம்* | *அகலம்* |
| | | *121 மீற்றர்* | *3.6 மீற்றர்* |
| | | *(397 அடி)* | *(12 அடி)* |

*வீதியின் பெயர்* - *கிரிவல்லாபிட்டிய அஷோக வித்தியால மாவத்தையில் முதலாம் ஒழுங்கை*
*கிராம அலுவலர் பிரிவு* - *மடவல*

கிரிவல்லாபிட்டிய அஷோக வித்தியாலய ஒழுங்கையிலிருந்து ஆரம்பிக்கின்ற இடப்பக்கமாக கே. ஏ. நிமல் அமரசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான குருகெப்பிட்டிய வத்த, பீ. ஜீ. பீ. குமாரி விஜேரத்தின மற்றும் கே. ஜீ. குசும் சிறியாலாதா, பீ. கே. ஆர். தர்மசேன என்பவர்களுக்கு உரித்தான சேருகஹமுல ஹேன எனும் காணிகளாலும்,

வலப்பக்கமாக பீ. டி. குசுமாவதீ பெரேரா, பத்மா ராணி செனவிரத்தின என்பவர்களுக்கு உரித்தான சேருகஹமுல ஹேன காணிகளுக்கு எல்லையாவதுமான கிரிவல்லாபிட்டிய அஷோக வித்தியாலய மாவத்தையில் முதலாம் ஒழுங்கை வீதி.

| | | | |
|---|---|---|---|
| *வீதியின் விபரம்* | - | *நீளம்* | *அகலம்* |
| | | *310 மீற்றர்* | *2.4 மீற்றர்* |
| | | *(1017 அடி)* | *(8 அடி)* |

*வீதியின் பெயர்* - *ஹீனாபோவ பன்சல வீதி*
*கிராம அலுவலர் பிரிவு* - *கன்சலகமுவ*

ஹீனாபோவ பன்சல வீதியிலிருந்து ஆரம்பித்து இடப்பக்கமாக எம். ஆர். ஆர். எஸ். சூரியபண்டார, எச். ஆர். பீ. சந்தியா குமாரி, எல். ஆர். பண்டார மெணிகே என்பவர்களுக்கு உரித்தான அம்பலன்பிட்டியே வத்த, எச். எம். ரஞ்ஜித் விமல் ஹேரத் மற்றும் பீ. ஜீ. ஆர். புஞ்சி மஹத்தயா என்பவர்களுக்கு உரித்தான அம்பலன்பிட்டியே வத்த (போகும்புர), கே. விமலானந்த தேரருக்கு உரித்தான அம்பலன்பிட்டிய வத்த (பன்சல் வத்த), எச். எம். ஜயதிலக என்பவருக்கு உரித்தான போகும்புர எனும் காணிகளாலும்,

வலப்பக்கமாக ஓடை வழியாக எல்லையாகும் ஹீனாபோவ பன்சல வீதி.

| | | | |
|---|---|---|---|
| *வீதியின் விபரம்* | - | *நீளம்* | *அகலம்* |
| | | *800 மீற்றர்* | *2.4 மீற்றர்* |
| | | *(2624 அடி)* | *(8 அடி)* |

*வீதியின் பெயர்* - *வெலிலியத்த பாலத்திலிருந்து மஹகும்புர முடிவு வரையிலான வீதி*
*கிராம அலுவலர் பிரிவு* - *கணுகொல்ல*

பரப்பே மெதகம வெலிலியத்த கும்புர அருகால் (பாலத்தின் அருகால்) ஆரம்பித்து இடப்பக்கமாக எம். டி. சோமாவதீ, டி. ஜீ. வில்சன் ரூபசிங்ஹ, டி. ஜீ. சந்திரதாஸ, ஆர். டி. சோபியா, எம். ஜீ. வில்சன் விஜேசிறி, எம். ஜீ. நிமல் முனசிங்ஹ, ஆர். டி. எம். ஜயன்தி தர்மதாஸ என்பவர்களுக்கு உரித்தான கம வெலேவில் அமைந்துள்ள வெலிலியத்த எனும் இத்த கஹபேல கும்புர, எம். ஜீ. விக்டர் குணசிங்ஹ, யூ. டி. ஜயரத்தின, எம். ஜீ. ஆனந்த முனசிங்ஹ என்பவர்களுக்கு உரித்தான வெலிலியத்த கும்புர, மற்றும் கமுகே கும்புர, பீ. ஜீ. பிரேமாவதீ என்பவருக்கு உரித்தான கமுகே கும்புர (வெலிலியத்த) ஆர். எஸ். பிரேமரத்தின, ஏ. ஜே. தர்மதாஸ, ஏ. டி. சுனில் பியரத்தின என்பவர்களுக்கு உரித்தான மஹகும்புர, ஏ. டி. எம். சோமரத்தின என்பவருக்கு உரித்தான கரலியகஹ கும்புர மற்றும் மஹகும்புர எனும் காணிகளுக்கும்,

இடப்பக்கமாக ஓடை வழியாகவும் எல்லையாகும் வெலிலியத்த பாலத்திலிருந்து மஹகும்புர முடிவு வரையிலான வீதி.

**கட்டுவன பிரதேச சபை**

அபிவிருத்திபெற்ற பிரதேசமாக பிரகடனம் செய்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், கட்டுவன பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி சபையின் கூட்டத்தொடரில் 7-6 என்ற தீர்மானமாக அங்கீகரிக்கப்பட்டு பின்வருமாறு உள்ளதான பிரேரணையானது மேற்படி சட்டவாக்கின் உபபிரிவினால் பிரதேச உள்ளூராட்சி ஆணை யாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆர். ஜி. கன்னங்கரா ஹப்பா/டீயு 5/பொது/03/09/பபா இலக்கமும் 2014.01.08 ஆந் திகதி கொண்ட கடிதத்தின் பிரகாரம் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்துடன் அறிவித்தல் செய்யப்படுகிறது.

ஐ. ஜி. மஹிந்த,
தவிசாளர்,
கட்டுவன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கட்டுவன,
2014, யூன் 11.

**பிரேரணை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரளுக்கு அமைய கட்டுவன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற பிரதேசங்கள் அவிருத்தி பெற்ற பிரதேசங்களாக ஏற்கப்படவேண்டுமென்றும், இதனை ஏற்றிட வேண்டுமென்ற இணக்கப்பாட்டுக்கு அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்ட பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதி பெறப்பட காரியமாற்ற வேண்டுமெனவும் கட்டுவன பிரதேச சபை பிரேரிக்கின்றது.

**அட்டவணை**

**பகுதி - 1 கட்டுவன வலயம்**

கட்டுவன பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள இல. 532- ரணசிங்கொட, இலக்கம் 534 வீரக்குட்டிகொட, இலக்கம் 535 கட்டுவன மற்றும் இலக்கம் 536 பங்கம்விளயாய ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள பிரதேசம்.

வடக்கு : இலக்கங்கள் 534, 535, 536 மற்றும் 512 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

கிழக்கு : இலக்கங்கள் 533, 529, 534 மற்றும் 535 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

தெற்கு : இலக்கங்கள் 548, 532, 538 மற்றும் 537 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

மேற்கு : இலக்கங்கள் 538, 535, 536 மற்றும் 513 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள்.

**பகுதி - 2 மித்தெனிய வலயம்**

கட்டுவன பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள இல. 496 - முறுங்கஸ்யாய மேற்கு, இலக்கம் 498 மித்தெனிய வடக்கு, இலக்கம் 499 மித்தெனிய மேற்கும் மற்றும் இலக்கம் 500 மித்தெனிய கிழக்கு ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள பிரதேசம்.

வடக்கு : இலக்கங்கள் 500, 501, 502 மற்றும் 501 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

கிழக்கு : இலக்கங்கள் 499, 499, 510 மற்றும் 498 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

தெற்கு : வீரக்கெட்டிய செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவைப் பகுதிகளான இலக்கங்கள் 495 மற்றும் 496 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

மேற்கு : இலக்கங்கள் 495, 500, 498 மற்றும் 494 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள்.

**பகுதி - 3 கிறம வலயம்**

கட்டுவன பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள இல. 551 - வௌந்தகொட மற்றும் இலக்கம் 552 மாப்பிடகந்த ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள பிரதேசம்.

வடக்கு : இலக்கங்கள் 552 மற்றும் 550 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

கிழக்கு : இலக்கங்கள் 458 மற்றும் 451 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

தெற்கு : இலக்கங்கள் 456 மற்றும் 450 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள் ;

மேற்கு : இலக்கங்கள் 452 மற்றும் 449 ஆவது கிராம சேவையாளர் பிரிவுகள்.

7-609

# நானாவித அறிவித்தல்கள்

**பண்டாரவளை மாநகர சபை**

வாகனங்கள் மூலம் நடமாடும் வியாபாரம் செய்தலுக்காக கட்டணம் அறவிடல்

பண்டாரவளை மாநகர சபை எல்லைக்குள் வாகனங்களை உபயோகித்து நடமாடும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகளிடமிருந்து கீழே அட்டவணையில் காணப்படும் மாதாந்த கட்டணங்களை 2014.06.11 ஆந் திகதியிலிருந்து மீண்டும் திருத்தப்படும் வரை அறவிடல் பொருத்தம் என்று 2014.06.11 ஆந் திகதியன்று பண்டாரவளை மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டதென்பதனைஇத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ட. எம். என். திசாநாயக்க,
நகர ஆணையாளர்,
பண்டாரவளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2014, யூன் 11.

**அட்டவணை**

| வியாபாரம் மேற்கொள்ளப்படும் வாகனம் | மாதாந்த கட்டணம் ரூபா ச. |
|---|---|
| நடமாடும் லொறி வண்டியொன்றினால் வியாபாரத்தை மேற்கொள்ளல் | 3,000 0 |
| நடமாடும் ஏனைய வாகனங்களினால் வியாபாரத்தை மேற்கொள்ளல் | 1,000 0 |

7-611

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.